# மணப்பாறை நகராட்சி

**2021- ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் (30.09.2021) 30- ஆம் தேதி வியாழக்கிழமை மாலை 4.00 மணிக்கு நகர்மன்ற அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்**

| மன்ற கூட்டம் நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்டப் பொருள் | தீர்மானம் |
|---|---|---|
| 30.09.2021 | **பொருள் - 1**<br>இந்திய அரசின் DAY - NULM திட்டத்தின் கீழ் சாலையோர வியாபாரிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறது. அதன்படி, மணப்பாறை நகராட்சியில் பதிவு பெற்ற சாலையோர வியாபாரிகள் 177 நபர்கள் உள்ளனர். மேற்கண்ட சாலையோர வியாபாரிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.20789/2021/UPA1 நாள்.20.09.2021-ல் மூன்று வகையாக வியாபாரம் செய்யும் (1.காய்கறிகள் மற்றும் பழங்கள், 2.உணவுப்பொருட்கள், 3.பூக்கள் மற்றும் பூஜை பொருட்கள்) வண்டிகளுக்கான விரிவான திட்ட அறிக்கை (Detailed Implementation) DIP தயார் செய்து, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்பிவைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.<br>அதேபோல், மணப்பாறை நகராட்சியில் பதிவு பெற்ற சாலையோர வியாபாரிகள் 177 நபர்களில் முதற்கட்டமாக பழங்கள் மற்றும் காய்கறிகள் விற்பனை செய்யும் வண்டி 20 பயனாளிகளுக்கும், உணவுப்பொருட்கள் விற்பனை செய்யும் வண்டி 20 பயனாளிகளுக்கும், பூக்கள் மற்றும் பூஜை பொருட்கள் விற்பனை செய்யும் வண்டி 17 பயனாளிகளுக்கும் ஆக மொத்தம் 57 பயனாளிகளுக்கு உரிய வண்டிகளுக்கான செலவினம் ரூ.43,60,000/- (ரூபாய் நாற்பத்து மூன்று லட்சத்து அறுபதாயிரம் மட்டும்) திட்ட மதிப்பீடு தயார் செய்து, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்களின் வழியாக நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்ப மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு</u>**<br>அனுமதிக்கலாம். (ந.க.எண்.1198/2016/எப்1) | **தீர்மான எண்.1005**<br>**அனுமதிக்கப்பட்டது.** |

<table>
<tr>
<td>30.09.2021</td>
<td>

**பொருள் - 2**

இந்நகராட்சி பொது சுகாதார லாரி TN 45CZ 0344-க்கு முன்பக்க கண்ணாடி புதியதாக மாற்றம் செய்ய நிர்வாக அனுமதி பெறப்பட்டதன் பேரில் கீழ்காணும் மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றன.

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் | தொகை ரூ |
|---|---|---|
| 1 | ஆண்டவர் ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், பைப்பாஸ் ரோடு, பொத்தமேட்டுப்பட்டி | 4875 |
| 2 | ஓம் முருகா ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், பைப்பாஸ் ரோடு, பொத்தமேட்டுப்பட்டி | 6500 |
| 3 | KMT ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், ஆண்டவர் கோவில் செக்போஸ்ட், திண்டுக்கல் ரோடு, மணப்பாறை | 6600 |

மேற்காணும் மன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய ஆண்டவர் ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், பைப்பாஸ் ரோடு, பொத்தமேட்டுப்பட்டி நிறுவன விலைப்புள்ளியினை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.2775/2021/எச்2)

</td>
<td>

**தீர்மான எண்.1006 அனுமதிக்கப்பட்டது.**

</td>
</tr>
<tr>
<td>30.09.2021</td>
<td>

**பொருள் - 3**

மணப்பாறை நகராட்சிக்குட்பட்ட பகுதியில் FSTP 2018-19 ஆம் ஆண்டு திட்டத்தின் கீழ் ரூ.260.00 லட்சம் மதிப்பீட்டில் கசடு கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணி மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.26888/2019/UGSS-2/2018-27, நாள்.29.01.2019 நாளிட்ட உத்தரவில் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தை செயல்படுத்த தேவையான 2 ஏக்கர் நிலம், நகராட்சிக்கு சொந்தமாக இல்லாத காரணத்தினால், திட்டத்தினை செயல்படுத்திட போதுமான உகந்த இடத்தை ஒதுக்கீடு செய்ய வேண்டி மாவட்ட ஆட்சித்தலைவருக்கு கருத்துரு அனுப்பப்பட்டதில், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.அ4/9797/2013 நாள்.04.03.2020-ல் மணப்பாறை வட்டம், செவலூர் கிராமம், வார்டு 'A' பிளாக் 3, T.S.No.9/1 தீர்வை ஏற்படாத தரிசு - மலை அரசு புறம்போக்கு நிலத்தில் 2.03.0ஹெக்டேர் (சுமார் 5 ஏக்கர்) நிலத்தினை FSTP நிலத்திற்காக மணப்பாறை நகராட்சி ஆணையர் முன் நுழைவு செய்ய அனுமதி வழங்கப்பட்ட நிலையில், மேற்படி இடத்தில், திட்டத்தினை செயல்படுத்திட அப்பகுதி

</td>
<td>

**தீர்மான எண்.1007 அனுமதிக்கப்பட்டது.**

</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>
பொதுமக்கள் தொடர்ந்து எதிர்ப்பு தெரிவித்தும், பணி செய்யவிடாமல் தடுத்தும் வருவதால், திட்டப்பணியை ஆரம்பித்து செயல்படுத்த முடியாத நிலை உருவாகி உள்ளது. எனவே மாற்று இடம் தேர்வு செய்து திட்டத்தினை செயல்படுத்திட அவசர அவசியம் கருதி கீழ்க்கண்ட இடம் இந்நகராட்சி மற்றும் வருவாய்த்துறை அலுவலர்களால் தேர்வு செய்யப்பட்டுள்ளது.
<table>
<tr><th>வ. எண்.</th><th>கசடு கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமையவுள்ள இடம்</th><th>நிலம் வகை</th><th>வார்டு எண்.</th><th>பிளாக் எண்.</th><th>நகரளவு எண்.</th><th>பரப்பளவு</th></tr>
<tr><td>1</td><td>சின்னமலை அருகில்</td><td>சர்க்கார் புறம்போக்கு</td><td>E</td><td>1</td><td>7&9/1</td><td>6 ஏக்கர்</td></tr>
</table>
மேற்காணும் மணப்பாறை தாலுக்காவிற்கு உட்பட்ட சர்வே எண்.'E', பிளாக் எண்.1, நகரளவு எண்.7 மற்றும் 9/1-ல் அமையும் 6 ஏக்கர் விஸ்தீரணமுள்ள அரசு புறம்போக்கு நிலத்தினை FSTP திட்டத்தினை செயல்படுத்துவதற்கு ஏதுவாக முன்நுழைவு அனுமதி (ENTER UPON PERMISSION) உத்தரவும், அதனை தொடர்ந்து மேற்படி நிலத்திற்கு நில உரிமை மாற்றம் செய்யக்கோரி மாவட்ட ஆட்சித்தலைவர், திருச்சிராப்பள்ளி அவர்களுக்கு பிரேரணை அனுப்பிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>
<u>அலுவலகக்குறிப்பு :-</u><br>
அனுமதிக்கலாம்
</td>
<td></td>
</tr>
<tr>
<td>30.09.2021</td>
<td>
பொருள் - 4<br>
இந்நகராட்சி அலுவலக ஈப்பு TN 45 BZ 7050-ல் ஏற்பட்டுள்ள Clutch plate, Kilisar bering broke மற்றும் Clutch kit-யை சரிசெய்தமைக்கான செலவினம் ரூ.9850/- மேற்கொண்டற்கும் மேலும் குடிநீ விநியோகம் பணி ஆய்வுகள் மேற்கொள்ளவும் ஈப்பு வாகனம் அவசியம் இயங்கவேண்டியுள்ளதால் பணியின்அவசரஅவசியம் கருதி நகராட்சி சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் பணி செய்து முடிக்கப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>
<u>அலுவலகக்குறிப்பு :-</u><br>
1. 1920 தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 15-ன் கீழ் மேற்கொண்ட செலவினத்திற்கு மன்றம் பதிவு செய்யலாம்.<br>
2. மேற்கானும் செலவினதொகையை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.<br>
(ந.க.எண்.1286/இ2/2020)
</td>
<td>தீர்மான எண்.1008 அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

30.09.2021

**பொருள் - 5**

இந்நகராட்சியில் 2020 முதல் 2023 வரையான மூன்றாண்டு குத்தகை இனங்கள் மற்றும் நகராட்சிக்கு சொந்தமான கடைகளுக்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்ட விளம்பரத்தினை செய்தி முன்னனி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டதற்க்கான தொகையினை உரிய நிறுவனத்திற்க்கு கீழ்குறிப்பிடப்பட்ட பட்டியலின்படி தொகை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | பொதுஏலம் / ஒப்பந்தப்புள்ளி நாள் | தொகை பட்டியல் எண்/நாள் | வெளியிட்ட நாளிதழின் பெயர்/நாள் | பட்டியல் தொகை |
|---|---|---|---|---|---|
| 1 | அட்வே அட்வடேஸ்மெண்ட் | 24.02.2021 | AD/1337/II 26/02/2021 | தினமலர் 12.02.2021 | 9,391 |
| 2 | அட்வே அட்வடேஸ்மெண்ட் | 26.02.2021 | AD/1328/II 26/02/2021 | தினமலர் 13.02.2021 | 9,391 |
| 3 | அட்வே அட்வடேஸ்மெண்ட் | 24.02.2021 | AD/1336/II 26/02/2021 | தினமலர் 12.02.2021 | 13,003 |
| 4 | அட்வே அட்வடேஸ்மெண்ட் | 26.05.2021 | AD/0016/V 10/05/2021 | தினமணி 08.05.2021 | 4,183 |
| 5 | அட்வே அட்வடேஸ்மெண்ட் | 26.05.2021 | AD/0007/V 10/05/2021 | தினகரன் 08.05.2021 | 9,467 |
| 6 | பிரைட் அட்வடேஸ்மெண்ட் | 04.08.2021 | 112 17/07/2021 | தினத்தந்தி 16.07.2021 | 8,064 |
| 7 | பிரைட் அட்வடேஸ்மெண்ட் | 04.08.2021 | 111 17/07/2021 | தினமணி 16.07.2021 | 6,972 |
| 8 | சாய் மீடியா மார்க்கெட் | 01.09.2021 | 073/AUGUST/2020-21 DT.14/08/2021 | இந்து தமிழ் 13.08.2021 | 27,896 |
| 9 | சாய் மீடியா மார்க்கெட் | 01.09.2021 | 074/AUGUST/2020-21 DT.14/08/2021 | இந்து தமிழ் 13.08.2021 | 30,996 |
| **மொத்த தொகை** | | | | | **1,19,363/-** |

**<u>அலுவலகக்குறிப்பு :-</u>**

அனுமதிக்கலாம்

**தீர்மான எண்.1009**
**அனுமதிக்கப்பட்டது.**

| | | |
|---|---|---|
| 30.09.2021 | **பொருள் - 6**<br>நகராட்சி நிர்வாக மண்டல செயற்பொறியாளர் அவர்களின் அறிவுரையின்படி, இந்நகராட்சி எரிவாயு மயானத்தில் 4 எண்ணிக்கையிலான CCTV காமிரா மானிட்டர் வசதியுடன் அமைக்கும் பணி கொரோனா பணிகளின் அவசரம் அவசியம் கருதி தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15-ன் கீழ் ரூ.47075/- மதிப்பீட்டில் பணி மேற்கொண்டமை மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு :-</u>**<br>பதிவு செய்யலாம்<br>(ந.க.எண்.1003/2020/எச்2) | **தீர்மான எண்.1010**<br>**பதிவு செய்யப்பட்டது** |
| 30.09.2021 | **பொருள் - 7**<br>இந்நகராட்சி பொது சுகாதார பிரிவிற்கு தேவையான பிளீச்சிங் பவுடர் 3 டன் பொது சுகாதார அவசர அவசியம் கருதி யாழி குரூப் புதுக்கோட்டை நிறுவனம் மூலம் தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15-ன் கீழ் ரூ.1.44 லட்சம் மிதிப்பீட்டில் பெறப்பட்டமை மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு :-</u>**<br>பதிவு செய்யலாம்<br>(ந.க.எண்.1003/2020/எச்2) | **தீர்மான எண்.1011**<br>**பதிவு செய்யப்பட்டது** |
| 30.09.2021 | **பொருள் - 8**<br>மணப்பாறை நகராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள வார்டு எண்.11,20 சாய் அக்ஷயா நகர், அண்ணாநகர், மணப்பாறைப்பட்டி ஆகிய தெருக்களில் புதிய LED தெரு விளக்கு அமைக்க இருப்பதனால் புதிய மின் இணைப்பு வழங்குவதற்கும் மற்றும் வார்டு எண்.11,12,20 எம்.ஜி.ஆர் நகர், எடத்தெரு, பாத்திமாமலை ஆகிய தெருக்களில் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள தெரு விளக்குகளில் கூடுதல் மின் திறன் Additional-Load அமைப்பதற்கும் உதவி மின் பொறியாளர் தமிழ்நாடு மின்சார வாரியம் (நகரம் அலுவலகம்) மணப்பாறை அவர்களிடமிருந்து கேட்பு தொகை ரூ.91,580/-ஐ செலுத்த தெரிவிக்கப்பட்டு Demand வரப்பெற்றுள்ளது. எனவே மேற்படி தொகை ரூ.91,580/-ஐ தமிழ்நாடு மின்சார வாரியம் (நகரம் அலுவலகம்) மணப்பாறை அவர்களுக்கு செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>**:-<br>1. மன்றம்அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண். 243-3/2021/இ1 | **தீர்மான எண்.1012**<br>**அனுமதிக்கப்பட்டது.** |

<table>
<tr>
<td>30.09.2021</td>
<td>

**பொருள் - 9**

இந்நகராட்சியில் இயங்கிவரும் கீழ்க்காணும் கனிணி சார்ந்த இனங்களுக்கு ஆண்டு பராமரிப்பு முடிவுடையவுள்ளதால் சென்ற ஆண்டு வழங்கிய அந்தந்த நிறுவனங்களிடமே கீழ்க்கண்டவாறு ஆண்டு பராமரிப்பை புதுப்பித்துக் கொள்ளவும் அதற்கான ஆண்டு பராமரிப்பு மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.2,00,000/-க்கும் செலவினத் தொகையினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் அனுமதி வேண்டப்படுகிறது.

<table>
<tr><th>வ. எண்.</th><th>கனிணி உபகரணங்கள்</th><th>பராமரிப்பு பணி மேற்கொள்ளும் நிறுவனம்</th><th>பராமரிப்பு பணி ஒப்படைப்பு செய்யப்படும் காலம்</th></tr>
<tr><td>1</td><td>Dell அல்லாத கனிணிகள் மற்றும் பிரிண்டர்கள், சுவிட்ச்கள், டாட் மேட்ரிக்ஸ் பிரிண்டர்கள்.</td><td>Sumaraj IT Solution</td><td>15.11.2021 to 14.11.2022</td></tr>
<tr><td>2</td><td>f â å f s¦, மடிக்f â å fள் DELL f â å fள் HP MULTI PURPOSE LASER PRINTER, ANIT VIRUS</td><td>Sumaraj IT Solution</td><td>15.11.2021 to 14.11.2022</td></tr>
<tr><td>3</td><td>LINE PRINTER</td><td>M/S. C. Technology</td><td>15.11.2021 to 14.11.2022</td></tr>
<tr><td>4</td><td>NUMERIC UPS 2KVA and 5KVA</td><td>Novateur Electrical and digital Systems Pvt Ltd.)</td><td>15.11.2021 to 14.11.2022</td></tr>
<tr><td>5</td><td>கணினி சர்வர் அறையில் Ï a§¦» t U« HITACHI SPLIT AC</td><td>Bharath Engineers</td><td>16.03.2022 to 15.03.2023</td></tr>
</table>

**<u>அலுவலகக்குறிப்பு</u> :-**

மன்றம் அனுமதிக்கலாம்

</td>
<td>

**தீர்மான எண்.1013**
**அனுமதிக்கப்பட்டது.**

</td>
</tr>
<tr>
<td>30.09.2021</td>
<td>

**பொருள் - 10**

மணப்பாறை நகராட்சியில் ஒப்பந்தத்தின் மூலம் 2018-19 முதல் 2020-21 வரை நடைப்பெற்று வரும் திட்டப்பணிகள் ஒப்பந்ததாரர்கள் மூலம் செயல்படுத்தப்பட்டு நடைப்பெற்று வருகிறது. மேற்கண்ட நடைபெற்று வரும் திட்டப்பணிகளை மாலை மலர் விளம்பர புத்தகத்தில் 08.09.2021-ம் தேதியில் வெளியிட்டதற்கு மாலை மலர் விளம்பர புத்தகம் திருச்சிராப்பள்ளி நிறுவனத்திடமிருந்து தொகை ரூ.11,000/- செலுத்த கோரி பில் பட்டியல் வரப்பெற்றுள்ளது. எனவே மேற்கண்ட செலவினத் தொகை

</td>
<td>

**தீர்மான எண்.1014**
**அனுமதிக்கப்பட்டது.**

</td>
</tr>
</table>

<table>
<tr><td></td><td>ரூ.11,000/-ஐ மேற்கண்ட நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br><u>அலுவலக குறிப்பு:-</u><br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2.செலவினத்தொகையை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.<br>(ந.க.எண். 3116/2021/இ1)</td><td></td></tr>
<tr><td>30.09.2021</td><td>பொருள் - 11<br>மணப்பாறை நகராட்சியில் ஒப்பந்தத்தின் மூலம் 2018-19 முதல் 2020-21 வரை நடைப்பெற்று வரும் திட்டப்பணிகள் ஒப்பந்ததாரர்கள் மூலம் செயல்படுத்தப்பட்டு நடைப்பெற்று வருகிறது. மேற்கண்ட நடைபெற்று வரும் திட்டப்பணிகளை மாலை முரசு விளம்பர புத்தகத்தில் 30.09.2021-ம் தேதியில் வெளியிட்டதற்கு மாலை முரசு விளம்பர புத்தகம் திருச்சிராப்பள்ளி நிறுவனத்திடமிருந்து தொகை ரூ.4935/- செலுத்த கோரி பில் பட்டியல் வரப்பெற்றுள்ளது. எனவே மேற்கண்ட செலவினத் தொகை ரூ.4935/- ஐ மேற்கண்ட நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது<br><u>அலுவலக குறிப்பு:-</u><br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2.செலவினத்தொகையை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்<br>(ந.க.எண்.3125/2021/இ1)</td><td>தீர்மான எண்.1015<br>அனுமதிக்கப்பட்டது.</td></tr>
<tr><td>30.09.2021</td><td>பொருள் - 12<br>நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.5773/2020/ஜே2 நாள்.11.09.2021 மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர், திருச்சிராப்பள்ளி அவர்களின் கூட்ட அறிவுரையின்படி, மணப்பாறை நகராட்சி பகுதியில் ஒவ்வொரு வாரமும் நடைபெற உள்ள மெகா கொரோனா தடுப்பூசி முகாமிற்கு பணிபுரியும் பணியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு முதல் கட்டமாக 10 வாரங்களுக்கு காலை டிபன் மற்றும் மதிய சாப்பாடு ரூ.60,000/- மதிப்பீட்டில் வழங்க தனி அலுவலர் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியதில் கீழ்க்காணும் மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றன.<br><br><table>
<tr><td rowspan="2">வ. எண்.</td><td rowspan="2">நிறுவனத்தின் பெயர்</td><td colspan="2">விலைப்புள்ளி விபரம்</td></tr>
<tr><td>டிபன் ஒன்றின் விலை ரூ.</td><td>சாப்பாடு ஒன்றின் விலை ரூ.</td></tr>
<tr><td>1</td><td>நலம் உணவகம், கோவில்பட்டி</td><td>50</td><td>75</td></tr>
</table></td><td>தீர்மான எண்.1016<br>அனுமதிக்கப்பட்டது.</td></tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td></td><td>ரோடு, மணப்பாறை</td><td></td><td></td></tr>
<tr><td>2</td><td>ஸ்ரீ விநாயகா ஹோட்டல்ஸ், விராலிமலை ரோடு, மணப்பாறை</td><td>65</td><td>85</td></tr>
<tr><td>3</td><td>ஸ்ரீ குமரவிலாஸ், மதுரை ரோடு, மணப்பாறை</td><td>60</td><td>80</td></tr>
</table>
மேற்காணும் விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய நலம் உணவகம் விலைப்புள்ளியினை ஏற்கவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>
<u>அலுவலக குறிப்பு:-</u><br>
1. அனுமதிக்கலாம்<br>
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரி பணி உத்தரவு வழங்கியதை அங்கீகரிக்கலாம்
</td>
<td></td>
</tr>
<tr>
<td>30.09.2021</td>
<td>
பொருள் - 13<br>
மணப்பாறை நகராட்சியில் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான சாதாரண தேர்தல்கள் -2021 நடத்த தேவையான ஏற்பாடுகளை மேற்கொள்ள தமிழ்நாடு தேர்தல் ஆணையம் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, தேர்தல் நடத்துவதற்கு தேவையான பணிகள் மேற்கொள்ள உத்தேச செலவினம் ரூ.18.00 இலட்சத்திற்கும் செலவின தொகையினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>
<u>அலுவலகக்குறிப்பு :-</u><br>
மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.3304/2021/அ3)
</td>
<td>தீர்மான எண்.1017 அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>30.09.2021</td>
<td>
பொருள் - 14<br>
மணப்பாறை நகராட்சி எல்லைக்குட்பட்ட மாரியம்மன் கோவில் பின்புறம் மணப்பாறை வட்டாட்சியர் அலுவலகத்திற்கு எதிர்புறம் சாலை மிகவும் சேதமடைந்து உள்ளதாலும் மணப்பாறை பேருந்து நிலையத்தில் பேருந்துகள் செல்லும் நுழைவு வழி மற்றும் வெளிப்புறம் வழி இருபுறமும் சாய்வு தளம் சேசதமடைந்து உள்ளதாலும் அதனை சீரமைத்து தார் தளமாக உடனடியாக புதுப்பிக்க வேண்டும் என திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வாய்மொழி உத்தரவு வழங்கினார். அதனை தொடர்ந்து மேற்படி கான்கீரிட் சாலையை சீரமைத்து தார் தளமாக புதுப்பிக்க தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.8.95 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
<u>அலுவலக குறிப்பு:</u><br>
1.மன்றம்அனுமதி வழங்கலாம் (ந.க.எண். 3223 /2021/இ1)<br>
2.செலவினத் தொகையை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்
</td>
<td>தீர்மான எண்.1018 அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| 30.09.2021 | **பொருள் - 15**<br>இந்நகராட்சியில் 2021-22-ஆம் ஆண்டிற்கு எழுது பொருட்கள், டோனர்கள், படிவங்கள், பதிவேடுகள் வாங்கவும் டோனர்கள் REFILL செய்யவும், உள்ளூர் அச்சகம் மற்றும் திருச்சிராப்பள்ளி தமிழ்நாடு பல்நோக்கு சேவை தொழில் கூட்டுறவு சங்கம் லிட்-ல் அச்சிட்டும் பெற்றுக்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. மேலும் 2020-21-ம் ஆண்டிற்கு உத்தேச செலவினம் ரூ.10.00 இலத்திற்கு பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்க வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**<br>மன்றம் அனுமதிக்கலாம் **(ந.க.எண்.1948/2010/பி3)** | **தீர்மான எண்.1019 அனுமதிக்கப்பட்டது.** |
| 30.09.2021 | **பொருள் - 16**<br>இந்நகராட்சியில் தேசிய நகர்ப்புற வாழ்வாதார திட்டம் (NATIONAL URBAN LIVELIHOOD MISSION ) 2020-21 ம் ஆண்டு திட்டத்தின் கீழ் மதிப்பீட்டுத் தொகை ரூ.90.00 இலட்சத்தில் (SPECIAL SHELTER) சிறப்பு தங்குமிடம் கட்டிடம் கட்டும் பணி மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி 04.10.2021 ஆம் தேதி கோரப்பட்டது. மேலும் அதற்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு விளம்பரத்தினை 16.09.2021-ம் தேதி மாலை மலர், டைம்ஸ் ஆப் இந்தியா தமிழ் மற்றும் ஆங்கில தினசரி நாளிதழில் விளம்பரம் 8X6 செ.மீ அளவில் விளம்பரம் செய்தமைக்கு Sreshta communications, சென்னை நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற பில் பட்டியல் தொகை ரூ.41,530/-ஐ மேற்படி உள்ள நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு:-**<br>1.மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்:455/2020/இ1) | **தீர்மான எண்.1020 அனுமதிக்கப்பட்டது.** |
| 30.09.2021 | **பொருள் - 17**<br>மணப்பாறை நகராட்சி அலுவலகத்தில் உள்ள பொது பிரிவு மற்றும் பொறியியல் பிரிவில் உள்ளாட்சி தேர்தல் பணி மற்றும் திட்டபணிகள் தொடர்பாக பிரிண்ட் எடுக்கும் பணிக்கு 2 அச்சுப்பொறி இயந்திரம் (PRINTER MACHINE) தேவைப்படுவதால் அதனை வாங்கவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ1.00 இலட்சத்திற்கும் செலவினத் தொகையினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு :-**<br>**மன்றம் அனுமதிக்கலாம்** | **தீர்மான எண்.1021 அனுமதிக்கப்பட்டது.** |

**தனி அலுவலர்**
**மணப்பாறை நகராட்சி**